Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Impact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p417 TIRJTS-2026-0034
DOI: 10.63300/tamilmanam.v12i06.20

RESEARCH ARTICLE

பக்தி இலக்கியமும் தமிழர் வாழ்வும்

Bhakti Literature and Tamil Life

முனைவர் பா. பாலச்சந்தர்[1,*]

[1] உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மண்ணிவாக்கம், சென்னை – 48

***Corresponding author:** முனைவர் பா. பாலச்சந்தர், balachandar03101989@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 25 October 2026
Revised: 28 October 2026
Accepted: 29 October 2026

Article ID
TIRJTS-2026-0034

Peer review
Double-blind peer review

Keywords
Bhakti literature
Tevaram
Divya Prabandham
path of love
equality
Andal
Karaikkal Ammaiyar
compassion for all living beings (jivakarunyam)

ABSTRACT

This paper aims to examine, through the ways of life that Bhakti literature presents, the love, equality, and social service of the Tamil people. Drawing on the Tevaram, Tiruvasagam, Tirumantiram, the Nalayira Divya Prabandham, and the Periya Puranam, it explains a path of worship that places love first, a voice of equality that rejected caste distinctions, and the outlook that service to people is itself service to God. It also examines the spiritual and literary standing granted to women, the view that revered nature as a form of the divine, the musical structure of the hymns (pann), compassion for all living beings (jivakarunyam), and service rendered within household life. The study concludes that Bhakti literature consists of works on the art of living that together stress love, righteousness, and social harmony.

How to cite this article: முனைவர் பா. பாலச்சந்தர் (2026). பக்தி இலக்கியமும் தமிழர் வாழ்வும். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 417. https://doi.org/10.63300/tamilmanam.v12i06.20
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

அன்பு, தொண்டு, சமத்துவம், பெண்கள், இயற்கை, இசை, ஜீவகாருண்யம் ஆகியவற்றின் ஆய்வு

A Study of Love, Service, Equality, Women, Nature, Music, and Compassion for All Life

ஆய்வுச் சுருக்கம்:பக்தி இலக்கியங்கள் காட்டும் தமிழர்களின் வாழ்வியல் நெறிகள் மூலம் தமிழர்களின் அன்பு, சமத்துவம், சமூக சேவை ஆகியவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். தேவாரம், திருவாசகம், திருமந்திரம், நாலாயிர திவ்வியப்

பிரபந்தம், பெரிய புராணம் ஆகியவற்றின் வழி, அன்பை முதன்மையாகக் கொண்ட வழிபாட்டு நெறி, சாதி வேறுபாடுகளை மறுத்த சமத்துவக் குரல், மக்கள் பணியே இறைப்பணி என்னும் பார்வை ஆகியவை விளக்கப்படுகின்றன. மேலும், பெண்களுக்குக் கிடைத்த ஆன்மிக இலக்கிய இடம், இயற்கையை இறைவடிவாகப் போற்றிய நோக்கு, பண்ணிசை அமைப்பு, ஜீவகாருண்யம், இல்லறத் தொண்டு ஆகியவையும் ஆராயப்படுகின்றன. பக்தி இலக்கியங்கள் அன்பையும் அறத்தையும் சமூக நல்லிணக்கத்தையும் ஒருங்கே வலியுறுத்தும் வாழ்வியல் நூல்கள் என்பது இவ்வாய்வின் முடிவு.

திறவுச் சொற்கள்:பக்தி இலக்கியம்; தேவாரம்; திவ்வியப் பிரபந்தம்; அன்பு நெறி; சமத்துவம்; ஆண்டாள்; காரைக்கால் அம்மையார்; ஜீவகாருண்யம்

1. முன்னுரை

சங்க இலக்கியங்கள் மனிதனின் அகவாழ்வையும் புறவாழ்வையும் பாடின என்றால், சங்கம் மருவிய காலத்திற்குப் பின் தோன்றிய பக்தி இலக்கியங்கள் இறைவனோடு மனிதன் கொள்ளும் உன்னதமான உறவைப் பாடின. அவை வெறும் சமயக் கருத்துகளைப் போதிக்காமல், அக்காலத் தமிழர்களின் பண்பாடு, ஒழுக்கம், சமுதாயப் பார்வை, அறநெறிகள் போன்ற வாழ்வியல் விழுமியங்களை ஏந்தி நிற்கும் பெட்டகங்களாகத் திகழ்கின்றன.

கி.பி. ஏழு முதல் ஒன்பதாம் நூற்றாண்டுவரை தமிழகத்தில் அன்பை முதன்மையாகக் கொண்டு இறைவனை வழிபடும் நெறிகள் தோன்றின. சைவ, வைணவ சமயங்களின் எழுச்சியால், அகத்திணை மரபுகளைப் பின்பற்றித் தனிமனித ஒழுக்கத்தையும் சமூக ஒற்றுமையையும் வலியுறுத்தும் உயர் வாழ்வியல் நெறிகளைப் பக்தி இலக்கியங்கள் சுட்டிநிற்கின்றன. தமிழர்களைக் குறுகிய சுயநல வட்டத்திலிருந்து விடுவித்துப் பரந்த மனப்பான்மையுடன் வாழ வழிவகுத்ததும் இவ்விலக்கியங்களே.

2. ஆய்வு நோக்கமும் எல்லையும்

தேவாரம், திருவாசகம், திருமந்திரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ஆகியன முன்மொழியும் தமிழர் வாழ்வியல் நெறிகளைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும். அன்பு நெறி, தொண்டு, சமத்துவம் என்னும் மூன்று கூறுகள் இங்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நாயன்மார் வரலாற்றைக் கூறும் பெரிய புராணம் பிற்காலத்தது (பன்னிரண்டாம் நூற்றாண்டு) எனினும், பக்தி இயக்கத்தின் மரபுகளைத் தொகுத்துக் காட்டுவதால் துணைச் சான்றாகக் கொள்ளப்படுகிறது. விளக்கமுறை, பகுப்பாய்வு முறை, சமூகவியல் அணுகுமுறை ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

3. பக்தி இயக்கமும் தமிழ்ச் சமூகமும்

பன்னிரு திருமுறைகள், தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரங்கள் ஆகியவை சைவத்தின் இலக்கியப் பெட்டகங்கள்; ஆழ்வார்களின் பாசுரத் தொகுப்பான நாலாயிர திவ்வியப் பிரபந்தம் வைணவத்தின் களஞ்சியம். இவை இறைவழிபாட்டை மட்டுமன்றித் தமிழர்களின் வாழ்வியல் நெறிகளையும் பண்பாட்டையும் அழகாகப் பதிவுசெய்துள்ளன. உயர்குடியினர்க்கு மட்டும் உரியதாக இருந்த இறைநெறியைச் சமுதாயத்தின் அடிமட்டம் வரை கொண்டுசென்றதில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆற்றிய பங்கு அளப்பரியது.

4. அன்பு நெறி

தமிழர் வாழ்வின் அடிப்படைப் பண்பான அன்பு, பக்தி இலக்கியங்களில் உச்சநிலை அடைந்தது எனலாம். அன்பே கடவுள் என்பதைத் திருமூலர் தம் திருமந்திரத்தில் தெளிவாகப் பாடுகிறார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்

அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்

அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

(திருமந்திரம் 270)

வைணவ மரபில் பூதத்தாழ்வார், அன்பையே விளக்காகவும் ஆர்வத்தையே நெய்யாகவும் உருக்கத்தையே திரியாகவும் கொண்டு இறைவனுக்கு ஞானச்சுடர் ஏற்றுவதாகப் பாடுகிறார்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக

இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புருகி

ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு

ஞானத் தமிழ்புரிந்த நான்

(பூதத்தாழ்வார், இரண்டாம் திருவந்தாதி)

சக மனிதரிடத்தும் பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதே இறைவனை அடையும் வழி என்னும் உன்னத வாழ்வியல் நெறியை இப்பாடல்கள் போதிக்கின்றன. இவ்வகையில் அகத்திணை மரபில் தலைவன் தலைவியிடையே நிலவிய அன்பு, இறைவன் – அடியார் உறவாக விரிவடைந்தது.

5. தொண்டு: மக்கள் பணியே இறைப்பணி

தமிழர்களின் சேவை மனப்பான்மைக்குச் சிறந்த சான்றாக விளங்குவது திருநாவுக்கரசரின் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் வாசகம். இது தமிழர்களின் உயர்ந்த விழுமியமாகப் போற்றப்படுகிறது. சமூகத்தின் எளியவர்களுக்கும் இறையடியார்களுக்கும் சுயநலமின்றித் தொண்டு செய்வதைத் தம் வாழ்வின் பெரும் பேறாகத் தமிழர்கள் கருதினர்.

பெரிய புராணம் காட்டும் நாயன்மார் வரலாறுகள், பசித்தவர்க்கு உணவிடுதலைத் தலையாய கடமையாகக் காட்டுகின்றன. அடியாரை உபசரித்தல், சமூகத்தில் பசியில்லா நிலையை உருவாக்கும் வாழ்வியல் நெறியாகப் பின்பற்றப்பட்டது. நாயன்மார்கள் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிறர் நலனுக்காகவும் இறைவனுக்காகவும் அர்ப்பணித்தனர். இறைப்பணியோடு கலந்த மக்கள் பணியே சிறந்தது என்பது பக்தி இலக்கியங்கள் போதிக்கும் செய்தியாகும்.

6. சமத்துவம்

பக்தி இயக்கத்தின் மிக முக்கியமான சமூகப் பங்களிப்பு, சாதி வேறுபாடுகளை எதிர்த்துச் சமத்துவத்தை முன்வைத்ததாகும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் சாதியக் கொடுமைகளைக் கடுமையாக எதிர்த்தனர். திருநாவுக்கரசர் சாத்திரங்களைப் பேசி வேறுபாடு பாராட்டுவோரை நோக்கிப் பின்வருமாறு வினவுகிறார்.

சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்

கோத்திரமும் குலமும்கொண்டு என்செய்வீர்

(திருநாவுக்கரசர், ஆறாம் திருமுறை)

இவ்வரிகள் அக்காலத்தில் பெரும் உத்வேகமாக அமைந்து, சமுதாயத்தில் பக்தி நெறி செழித்தோங்கக் காரணமாயின. திருமூலரும் குல வேறுபாட்டை மறுத்து, மனிதகுலம் ஒன்றே என்றும் இறைவன் ஒருவனே என்றும் பாடினார்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

நன்றே நினைமின் நமனில்லை யாமே

(திருமந்திரம் 2104)

மன்னராக இருந்தும் குலசேகர ஆழ்வார் எளிய அடியார் திருக்கூட்டத்தையே உயர்வாகப் போற்றி அவர்களைத் தலைமேல் கொண்டாடினார்; இதனால் பிறப்பால் அனைவரும் சமம் என்னும் வாழ்வியல் நெறி நிலைநாட்டப்பட்டது. பெரிய புராணம் காட்டும் நந்தனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் வரலாறுகள், அடித்தட்டு மக்களின் பக்தியும் வாழ்வும் போற்றிப் பாதுகாக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றன. இறைவன்

திருவடிக்கு அன்புசெய்யும் எளிய மக்களே உயர்ந்தவர்கள் என்னும் கருத்தே இங்கு மையமாகும்.

7. பக்தி நெறியும் பெண்களும்

பக்தி இலக்கியங்கள் பெண்களைப் பல்வேறு தன்மைகளில் பதிவுசெய்துள்ளன. பெண்கள் ஆன்மிகத்திலும் இலக்கியத்திலும் உயர்ந்த இடம் பெற்றிருந்தனர். காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்ற பெண் கவிஞர்கள் தம் பக்திப் பாடல்களின் வழித் தமிழ்ச் சமூகத்தில் பெண்களுக்கான உரிமையையும் மதிப்பையும் நிலைநாட்டினர்.

காரைக்கால் அம்மையார் மூத்த திருப்பதிகங்கள், அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை ஆகியவற்றைப் பாடியவர்; நாயன்மார் வரிசையில் இடம்பெற்ற ஒரே பெண் கவிஞராக அவர் விளங்குகிறார். ஆண்டாள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகியவற்றைப் பாடியவர். தங்கள் விருப்பப்படி இறைவனைத் துதிக்கும் சுதந்திரம் இவர்களுக்கு இருந்தது என்பதைக் காணமுடிகிறது. பகட்டான வாழ்க்கையைவிடத் தூய்மையான உள்ளமும் நேர்மையும் கொண்ட எளிய வாழ்க்கையே சிறந்தது என்பதையும் பக்தி இலக்கியங்கள் வலியுறுத்தின. கள்ளமற்ற உள்ளமே இறைவனின் இருப்பிடம் என்பதைத் திருமூலர் பாடுகிறார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்

தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்

கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

(திருமந்திரம் 1823)

8. இயற்கை போற்றும் வாழ்வியல்

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தாங்கள் சென்ற திருத்தலங்களின் இயற்கை வளங்களை விரிவாகப் பாடியுள்ளனர். காடு, ஆறு, மலை, பறவை போன்ற இயற்கைக் கூறுகளை இறைவனின் வடிவமாகவே கருதிப் போற்றினர். இது தமிழர்கள் இயற்கையை நேசித்து அதனோடு இணைந்து வாழ்ந்த வாழ்வியல் முறையைக் காட்டுகிறது. தேவாரம், திருவாசகம் ஆகியவற்றிலும் சோலைகள், ஆறுகள் முதலான இயற்கை வளங்கள் சிறப்பிக்கப்படுகின்றன.

ஆண்டாளின் திருப்பாவை, மார்கழி நோன்பின் வழி நாடு வளம் பெறுவதையும் மழை பொழிவதையும் இயற்கைச் செழிப்பாக வருணிக்கிறது.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து

ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்

தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி

வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்

நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்

(ஆண்டாள், திருப்பாவை 3)

நாட்டில் துன்பம் நீங்கி, மாதம் மும்மாரி மழை பெய்து, நெல்வயல்களில் கயல்மீன்கள் துள்ளி, குவளை மலர்களில் வண்டுகள் உறங்க, பசுக்கள் குடம் நிறையப் பால் சுரக்கும் நீங்காச் செல்வம் நிலவ வேண்டும் என்பது இப்பாடலின் பொருள். வேளாண்மை, கால்நடை வளம், இயற்கைச் செழிப்பு ஆகியவற்றைச் சமூக நலனோடு இணைத்து நோக்கிய தமிழர் பார்வையை இது வெளிப்படுத்துகிறது.

9. பண்ணும் இசையும்

இறைவனைத் துதிக்கும் முறையில் இசைப்பாடல் வடிவம் முக்கிய இடம் பெறுகிறது. தேவாரப் பதிகங்கள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட பண்ணில் அமைந்தவை; ஆழ்வார் பாசுரங்களும் இசையோடு பாடப்பட்டவை. ஒவ்வொரு பாடலிலும் பண், இசை, தாளம் போன்ற அமைப்புமுறைகள் பரவலாகக் காணப்படுகின்றன. இசையையும் இலக்கியத்தையும் ஒருங்கிணைத்து எளிய மக்களும் இறைவழிபாட்டில் பங்கேற்கும் வாய்ப்பை இவ்வடிவம் உருவாக்கியது. திருநீலகண்ட யாழ்ப்பாணர் வரலாறு, பாணர் மரபிலிருந்து வந்த இசைக்கலைஞருக்கும் பக்தி இயக்கத்தில் சிறப்பிடம் இருந்ததைக் காட்டுகிறது.

10. ஜீவகாருண்யமும் இல்லற நெறியும்

சைவ இலக்கியத்தின் அடிப்படை, எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் என்னும் ஜீவகாருண்யமே. திருமூலர் இதனை, இறைவனுக்கு ஒரு பச்சிலையும், பசுவுக்கு ஒரு வாயுறையும், உண்ணும்போது ஒரு கைப்பிடியும், பிறர்க்கு இன்னுரையும் ஈதல் எல்லோர்க்கும் இயலும் அறம் என எளிமையாக விளக்குகிறார்.

யாவர்க்கு மாம்இறை வர்க்கொரு பச்சிலை

யாவர்க்கு மாம்பசுக் குண்ணஒரு வாயுறை

யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி

யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

(திருமந்திரம் 252)

நாயன்மார்கள் இல்லறத்தில் இருந்துகொண்டே அடியார்க்கு உணவளித்தல், உடையளித்தல் போன்ற நற்பணிகளைச் செய்தனர். இளையான்குடி மாறநாயனார் மழை பெய்த இரவிலும் பசியோடு வந்த அடியாருக்கு உணவளிக்க முயன்றார் என்னும் பெரிய புராணச் செய்தி இதற்குச் சான்றாகும். கணவனும் மனைவியும் இணைந்து விருந்தினரை உபசரிப்பதையும் இல்லற தர்மத்தைக் காப்பதையும் சைவம் இல்லறத்தின் மிக உயர்ந்த நெறியாகப் போற்றியது. சாதி, குலம், ஏழை, பணக்காரன் என்னும் பாகுபாடுகளைக் கடந்து மனிதர் அனைவரும் சமமே என்பதே இங்கும் நிலைநிறுத்தப்படும் செய்தியாகும்.

வைணவ இலக்கியங்கள் இறைவனை முழுமையாகச் சரண் அடைதல் என்னும் நெறியைத் தமிழ் மரபில் தெரிவிக்கின்றன. கோபம், பொறாமை, பகை போன்ற தீய பண்புகளை நீக்கி ஒழுக்கமான வாழ்க்கையை வாழ வழிவகுப்பதிலும் பக்தி இலக்கியங்கள் கவனம் செலுத்துகின்றன. ‘அன்பின் வழியது உயிர்நிலை’ என்னும் கோட்பாட்டின் அடிப்படையில், மக்கள் அனைவரும் இன்புற்று வாழும் வழிகளைச் சைவ வைணவப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

11. ஒப்பீட்டுத் தொகுப்பு

அட்டவணை 1: பக்தி இலக்கியங்கள் வலியுறுத்திய வாழ்வியல் நெறிகள்

வாழ்வியல் நெறி	இலக்கியச் சான்று	வெளிப்படும் விழுமியம்
அன்பு	திருமந்திரம் 270; பூதத்தாழ்வார் அந்தாதி	அன்பே இறைவன்; உயிர்களிடத்து அன்பு
தொண்டு	திருநாவுக்கரசர் பாடல்; பெரிய புராணம்	மக்கள் பணியே இறைப்பணி; பசியாற்றல்
சமத்துவம்	ஆறாம் திருமுறை; திருமந்திரம் 2104; குலசேகர ஆழ்வார்	பிறப்பு வேறுபாடு மறுப்பு; அடித்தட்டு மக்களுக்கு மதிப்பு
சமய நல்லிணக்கம்	சைவ – வைணவ பக்தி மரபுகள் முழுமையும்	இறைநெறி அனைவருக்கும் பொது

பெண்கள், இயற்கை, இசை, ஜீவகாருண்யம், இல்லறம் ஆகிய கூறுகளை அடுத்த அட்டவணை தொகுத்துக் காட்டுகிறது.

அட்டவணை 2: பக்தி இலக்கியங்களில் இடம்பெறும் வாழ்வியல் கூறுகள்

கூறு	இலக்கியச் சான்று	வெளிப்படும் வாழ்வியல் செய்தி
பெண்கள்	காரைக்கால் அம்மையார் படைப்புகள்; ஆண்டாள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி	பெண்களுக்கு ஆன்மிக, இலக்கிய உரிமையும் மதிப்பும்
எளிய உள்ளம்	திருமந்திரம் 1823	கள்ளமற்ற உள்ளமே இறைவனின் இருப்பிடம்
இயற்கை	திருப்பாவை 3; தேவார, திருவாசகப் பாடல்கள்	இயற்கைச் செழிப்பைப் போற்றிக் காத்தல்
இசை	தேவாரப் பண்கள்; ஆழ்வார் பாசுரம்	இசையின் வழி அனைவரையும் இணைத்தல்
ஜீவகாருண்யம்	திருமந்திரம் 252	பிற உயிர்க்கும் பசிக்கும் கருணை
இல்லறம்	பெரிய புராணம் – நாயன்மார் வரலாறுகள்	விருந்தோம்பலும் அடியார் பணியும்

12. முடிவுரை

பக்தி இலக்கியங்கள் தமிழ் மரபில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. உயர்குடிகளுக்கு மட்டுமே உரியதாக இருந்த இறைநெறியைச் சமுதாயத்தின் அடிமட்டம் வரை கொண்டுசென்றதில் நாயன்மார்களின் பங்கு அளப்பரியது. இவ்விலக்கியங்களின் வழிச் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் குறைந்தன; சமத்துவம் பெருகியது; எல்லோரும் இறைவனை வழிபடும் நிலை உருவாயிற்று; சமய நல்லிணக்கம் பரவலாயிற்று. பெண்களுக்கு இலக்கிய ஆன்மிக உரிமை, இயற்கை மீதான நேசம், இசைவழி இணைப்பு, எல்லா உயிர்களிடத்தும் கருணை, இல்லறத்தில் தொண்டு ஆகியவை இவ்வாழ்வியலின் தூண்களாக விளங்குகின்றன. அன்போடு வாழ்தல், எளியவர்க்கு ஈதல், பிறர் பசி போக்குதல், சாதி பேதமின்றி எல்லோரையும் சமமாக மதித்தல் ஆகியவையே பக்தி இலக்கியங்கள் தமிழர்க்குக் கற்றுத்தந்த நெறிகளாகும்.

மேற்கோள் நூல்கள்

References

அருணாசலம், ப. பக்தி இலக்கியம். பாரி புத்தக நிலையம்.

இராகவையங்கார், மு. ஆழ்வார்களின் கால நிலை. மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

சிவஞானம், வீ. தேவாரம் – திருஞானசம்பந்தர். விஜயா பதிப்பகம், கோவை.

பரமசிவம், தொ. சமயங்களின் அரசியல். பரிசில் வெளியீடு, சென்னை.

ஆண்டாள். திருப்பாவை.
திருமூலர். திருமந்திரம்.
நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.